# நூல் விமர்சனம் : ஈரோடு புலவர் இராசு அய்யா அவர்கள் எழுதி 5 பதிப்புகள் கண்ட "காலிங்கராயன் வாய்க்கால்"

– கோ.செ.மு.கந்தசாமி பாண்டியன்

தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 56.5 மைல் தூரம் வாய்க்கால் வெட்டி புஞ்சை நிலங்களைப் பசுமை கொஞ்சும் நஞ்சை நிலங்களாக்கிய குறுநில மன்னர் காலிங்கராயனுக்கு வாய்க்கால் துவங்கும் இடத்தில் ( அணை நாசுவம்பாளையம், பவானி ) சிலையும், சுற்றுலாப் பூங்காவும் அமைக்கப்படும் என அரசாணை வெளியிட்டுள்ள நிலையில் சரியான நேரத்தில் புலவர் இராசு அய்யா அவர்கள் "காலிங்கராயன் வாய்க்கால்" என்ற தனது நூலின் 5 ஆவது பதிப்பினைப் புதிய விவரங்களைச் சேர்த்து வெளியிட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. பொதுவாக, கொங்கு வேளாளர்கள் பெருந்திரளாகக் கூடி தங்கள் இனச் சரித்திர நாயகர்களுக்கு விழாக்களை எடுப்பது மூன்று இடங்களில் தான் என்று சொல்லலாம். ☞ "அண்ணமார்" எனப்படும் பொன்னர் – சங்கருக்கு மாசித் தேர்த் திருவிழா வளநாடு, வீரப்பூரில் நடப்பதில் கலந்து கொள்வது. ☞ ஆண்டுதோறும் கொங்கு இனச் சங்க முன்னோடி "கோவை செழியனுருக்கு" அவர் மறைந்த தினமான மார்ச் 14 அன்று அவர் நீள் துயில் கொண்ட இடத்தில் அஞ்சலி செலுத்துவது. ☞ ஆடி 18 அன்று வெள்ளையர்களை எதிர்த்து நின்ற "தீரன் சின்னமலைக்கு" ஓடாநிலை, சங்ககிரியில் விழா எடுப்பது.

இதுகாணும் மேலே கூறப்பட்ட மூன்று நிகழ்வுகளும் ஆண்டுதோறும் விடாமல் விமர்சையாக நடந்து வருகின்றன. வாய்க்கால் கண்ட காலிங்கராயனுக்கு சிலை அமைத்து அரசு விழா எடுப்பதால், இனி இதுவும் ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும் என்பதில் ஐயமில்லை. கொங்கு வேளாளர்கள் கூட்டமாய் கூடும் 4 ஆவது விழாவாக இது இருக்கப் போகின்றது. "தை – 5" காலிங்கராயன் தினம் என்கிறுர் புலவர் இராசு அய்யா. தைப் பொங்கல் திருநாள் வரிசையில் இறுதி நாளாக ( காணும் பொங்கலுக்கு அடுத்த நாளாகக் கூட ) இத்தினத்தைக் கொண்டாடலாம். காலிங்கராயனை அரசு அங்கீகரித்து விட்டதால், அவரது பெருமையும், கீர்த்தியும் மக்களிடையே சற்று அதிகரித்து விட்டது என்று தான் சொல்ல வேண்டும். "கொங்கு வேளாளர் குல வரலாறு" நூல் எழுதுபவர்கள் சாத்தந்தை குலம் பற்றி எழுதும் போது, காலிங்கராயனுக்கு வாய்க்கால் வெட்ட வேண்டிய கட்டாயம், அவசியம் ஏன் வந்தது? எனக் கதை போல ஒரு நிகழ்ச்சியை விவரித்திருப்பர். காலிங்கராயன் வரலாற்றை எழுத்தாளர் "பாஸ்கர தாசன்" கதை வடிவில் அவருக்கே உரிய நடையில் எழுதியிருந்தார். இவை போக, காலிங்கராயன் வாய்க்கால் பற்றி அவ்வப்போது பத்திரிக்கையில் கட்டுரைகள் தலை காட்டுவதும் உண்டு. காலிங்கராயன் வாய்க்கால் பற்றிய முழு வரலாற்று நூல் ஒன்று உண்டு என்றுல் அது நமது புலவர் இராசு அய்யா எழுதிய நூல்தான்.

ஒரு தலைப்பின் கீழ் ஒரு நூலை புலவர் இராசு அய்யா உருவாக்க முனைகிறுர்

என்றால் அந்தத் தலைப்புக்குரிய அனைத்து விவரங்களையும் அவைகள் கிடைக்கும் இடங்களில் தேடிப் பிடித்து முழுமையான தகவல் நூலாக வெளியிடுவது அவர் வழக்கம். இந்நூலையும் இலக்கியம், தனிப்பாடல், கல்வெட்டு, செப்பேடு, ஓலைப்பட்டயம், பொதுப்பணித்துறை அறிக்கைகள், குறிப்புகள், நூலகங்கள், ஆவணக் காப்பக ஆவணங்கள், வெளிநாட்டார் குறிப்புகள், செவி வழிச் செய்திகள் அனைத்திலும் கிடைத்த அரிய பல தகவல்களை வைத்து இந்நூலை உருவாக்கம் செய்துள்ளார். காலிங்கராயன் என்ற பெயர்க் காரணம், அவரின் சிறு வயது வரலாறு, வாய்க்கால் வெட்டும் எண்ணம் வந்த விதம், காலிங்கராயனைத் தெய்வமாக வழிபடக் காரணம், காலிங்கராயனின் வாரிசுகள் பற்றிய விவரம், அந்தக் காலப் பேச்சு வழக்கில் எழுதப்பட்ட காலிங்கராயனின் கல்வெட்டுக்கள், அணை கட்டிய பட்டயம், காலிங்கராயன் செப்பேடு, காலிங்கராயனின் **"கை பீது"** ஆகிய தலைப்புகளில் இந்நூலில் வெளிவந்த கட்டுரைகள் படிக்கச் சுவை தருவன. பொறியாளர்களே வியக்கும் வண்ணம் கட்டப்பட்ட அணை / வெட்டப்பட்ட வாய்க்கால் பற்றிய வெளிநாட்டினர் எழுதியுள்ள குறிப்புகள் இந்நூலின் சிறப்பு அம்சப் பகுதியாக ( HIGH LIGHT ) உள்ளது. நூலின் பின் இணைப்பில் உள்ள புகைப்படங்கள் நமக்கு காலிங்கராயன் அணை / வாய்க்கால் அது தொடர்பான இடங்களைக் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றன. அவைகள் வண்ணப் படங்களாக இருந்திருந்தால் எடுப்பாக இருந்திருக்கும்.

நமது மூதாதையர் சேவை மனப்பான்மை, பெருஞ் சாதனை, மக்களிடையே பெற்ற புகழ், எடுத்த செயலை முடிக்கும் வரை விடாமுயற்சி, அவர்களின் வலிமை மீது பற்று, பாசம் கொண்டு ஆர்வமாகப் படிப்பவர்களுக்கும் "யார் இந்த காலிங்கராயன்? அப்படி என்ன சாதித்தார்?" என ஆவல் கொண்டு அறியத்துடிக்கும் இளைய தலைமுறையினருக்கும் இந்நூல் ஒரு வரப் பிரசாதம். நமது அனைத்துச் சமூக அமைப்புகளும் தலைமை சங்கம் முதல் கிளைச் சங்கங்கள் வரை, அலுவலக நூலகத்தில் இந்த நூலை வாங்கி வைத்தால், எதிர்வரும் தலைமுறைகள் அனைத்து சமூக மக்களின் நலனுக்காக தன்னலமற்று உழைத்த தியாக சீலரும், வெற்றித் திலகமுமான காலிங்கராயனின் வரலாற்றைப் படித்து பெருமையும் பெருமிதமும் கொள்வர். அனைவரும் வாசிக்க வேண்டிய அற்புத நூல் இது.

<u>நூல் கிடைக்கும் இடம் :</u>

**கொங்கு ஆய்வு மையம்**

புலவர் பூங்குடில், 58 / 2, பாலக்காட்டுத் தோட்டம்,
புதிய ஆசிரியர் குடியிருப்புப் பாதை, ஈரோடு - 638 011
தொலைப்பேசி எண் : 0424 - 2262664

**நூலின் விலை ரூ. 100 /- மட்டும்**